செ.வெ.எண் 109 நாள் 22.04.2016

# வேட்பாளர்/அரசியல் கட்சியினரின் தேர்தல் செலவீனங்களை கண்காணிக்க செலவீன பார்வையாளர்கள் வருகை

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. இரா.கஜலட்சுமி, இ.ஆ.ப. அவர்கள் தகவல்

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு வருகின்ற மே மாதம் 16ஆம் நாள் நடைபெற உள்ளதை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு பணிகள், வாக்குப் பதிவிற்கான முன்னேற்பாடு பணிகள் மற்றும் அரசியல் கட்சிகள்/வேட்பாளர்களின் தேர்தல் செலவீனங்களை கண்காணிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகின்றது. தேர்தல் பணிகள் மற்றும் விதிமுறைகள் மீறல் தொடர்பான புகார்களுக்கு **1800 425 1214** என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், அரசியல் கட்சிகளின் பணப் புழக்கம் குறித்த புகார்களுக்கு வருமான வரித்துறையின் **1800 425 6669** என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கும் தெரிவிக்கலாம்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசியல் கட்சிகளின் பணப் புழக்கத்தினை கண்காணிக்கும் வகையில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் வருவாய் மற்றும் காவல் துறை அலுவலர்களை கொண்ட 3 பறக்கும் படைக் குழுவினர் மற்றும் 3 நிலையான கண்காணிப்புக் குழுவினர் அமைக்கப்பட்டு, செயலாற்றி வருகின்றனர். இக்குழுவினர் வாகனங்களில் கொண்டு செல்லப்படும் பணம் இதர பொருட்கள் குறித்து, தொடர் கண்காணிப்புகள் மேற்கொண்டு வருவதோடு, உரிய ஆதாரமில்லாமல் கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் இதர பொருட்களை பறிமுதல் செய்து, வழக்கும் பதிவு செய்து வருகின்றனர்.

சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்/அரசியல் கட்சிகளின் அனைத்து தேர்தல் செலவீனங்களை கண்காணித்திட அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் உதவி தேர்தல் செலவீன பார்வையாளர்கள் தலைமையிலான குழு கண்காணித்து வருகின்றது. இக்குழுவினரின் பணிகள், பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்களின் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக இந்திய தேர்தல் ஆணையம் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் இந்திய வருவாய் பணி (I.R.S) நிலையிலான உயர் அலுவலரை தேர்தல் செலவீன பார்வையாளராக (Expenditure Observer) நியமனம் செய்துள்ளது. தேர்தல் செலவீன பார்வையாளர்கள் இன்று (22.04.2016) முதல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள தேர்தல் செலவீன பார்வையாளர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு ஆகியோரது தொடர்பு எண்களும், மாவட்ட கட்டுப்பாட்டு அறை மற்றும் வரிமான வரித்துறை கட்டுப்பாட்டு அறைகளின் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள், தேர்தல் தொடர்பான புகார்கள் மற்றும் அரசியல் கட்சிகள்/வேட்பாளர்களின் பணப் புழக்கம் தொடர்பான புகார்கள் ஏதேனும் இருப்பின், அது குறித்து தொலைபேசி எண்களில் தொடர்பு தகவல் தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான திருமதி. இரா.கஜலட்சுமி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை – 1800 425 1214**
**வருமான வரித்துறை கட்டுபாட்டு அறை எண் – 1800 425 6669**

| சட்டமன்றத் தொகுதி | பறக்கும் படைக் குழு தொடர்பு எண் | நிலை கண்காணிப்புக் குழு தொடர்பு எண் | உதவி தேர்தல் நடத்தும் அலுவலரின் தொடர்பு எண் | தேர்தல் நடத்தும் அலுவலரின் தொடர்பு எண் | தேர்தல் செலவீன பார்வையாளரின் பெயர் மற்றும் தொடர்பு எண். |
|---|---|---|---|---|---|
| 27.சோழிங்கநல்லூர் | 7397583078 | 7397583077 | 9445190094<br>9444754383<br>9445190095 | 7598640434 | திரு.ரவீந்தர்சிங் யாதவ் அவர்கள் 7397028834 |
| 30. பல்லாவரம் | 7397583067 | 7397583068 | 9487780943<br>8754446151<br>9442238224 | 9442695968 | |
| 28. ஆலந்தூர் | 7358232878 | 7358232385 | 9443990326<br>9445190092<br>9444149597 | 9952545032 | திரு. எஸ்.கே.மித்ரா அவர்கள் 7397028835 |
| 29.திருப்பெரும்புதூர் (தனி) | 7397583061 | 7397583062 | 9445000499<br>9442564121<br>9444456372 | 9442261157 | திரு. ராவத் அவர்கள் 7397028836 |
| 31. தாம்பரம் | 7397642431 | 7397642432 | 9444077099<br>9445000502<br>9384593855 | 9578635520 | திரு. கிரண் ரெட்டி அவர்கள் 7397028829 |
| 32. செங்கற்பட்டு | 9597098682 | 9597098768 | 9442118929<br>9445000500<br>7402606061 | 9445000414 | |
| 33. திருப்போரூர் | 7397583065 | 7397583066 | 9444239918<br>9445000501<br>7420606071 | 9445477826 | திரு.அன்கூர் அல்யா அவர்கள் 7397028825 |
| 34. செய்யூர்(தனி) | 7397583079 | 7397583080 | 9444236751<br>9445000504<br>9447400025 | 9445461737 | |
| 35. மதுராந்தகம் (தனி) | 7397583073 | 7397583074 | 9443989914<br>9965361975<br>9445000503 | 9445000415 | திரு. பிரியதர்ஷன் மிஸ்ரா அவர்கள் 7397028826 |
| 36. உத்திரமேரூர் | 7397583070 | 7397583071 | 9445000498<br>9445164756<br>7402606028 | 9445000168 | |
| 37. காஞ்சிபுரம் | 9047836771 | 9047836773 | 9566568681<br>9445000497<br>9787475042 | 9445000413 | திரு. ஜெகதீஸ் ஜாங்கிட் அவர்கள் 7397028827 |

செய்தி வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.